# அழைப்பொலி

ஓங்கி ஒலிக்கும் எட்டுத் திக்கும்...

இறைச்செய்தியை இலவசமாகத் தாங்கி வரும் முதல் இஸ்லாமிய தமிழ் இதழ்

அழைப்பு: 1 ஒலி: 6 | காலாண்டு இதழ் | ஜனவரி - மார்ச் 2018 | தனிச்சுற்றுக்கு மட்டும்



கௌரவ ஆலோசகர்கள்
M. பஷீர் ஃபிர்தவ்ஸி
முஹம்மது இஸ்மாயீல் காஷிஃபி
அபூமொஹ்சின்
முஹம்மது அபூபக்கர்

இதழ் வடிவமைப்பு:
"1st Step" இம்ரான்

ஆசிரியர்:
மக்தூம் தாஜ்

உங்கள் படைப்புகள்
மற்றும் கருத்துகளை அனுப்ப

"அழைப்பொலி"
எண்.14 (7-A), பி.பி.டி.ரோடு,
தாங்கல், சென்னை – 600 019.
: 98849 28787
: azhaippoli2017@gmail.com

**முஸ்லிம் அல்லாதவர்கள், இஸ்லாம் குறித்த ஐயங்களை மனம் விட்டுப்பேச...**



**Toll Free:**
**1800 2000 787**

# உள்ளே...

**4** ——— நற்செயல்கள் மூலம் சுவனம் செல்வோம்:

**6** ——— பாடம் படிக்கட்டும்; படிக்கட்டுத் தொங்கிகள்

**8** ——— வேதவரிகள், தூதர் மொழிகள்

**11** ——— அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக...

**12** ——— எல்லாருக்கும் இஸ்லாம்

**14** ——— வீடியோகேம் வண்ணத்துப்பூச்சிகள்

'அழைப்பொலி' இதழ் தங்கள் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப்பிற்கு தேடி வர ஒரு குறுஞ் செய்தி அனுப்புங்கள்

மின்னஞ்சல்: azhaippoli2017@gmail.com
வாட்ஸ்அப்: 98849 28787

**விளம்பரத் தொடர்புக்கு:**
**98849 28787**

# இஸ்லாமை இலகுபடுத்துங்கள்;
## இஸ்லாமிய அழைப்பை அழகுபடுத்துங்கள்!

*இஸ்லாம் பின்பற்றுவதற்கு மிகவும் எளிமையானது. அதனை யாரேனும் இறுக்க மாக ஆக்கிக் கொண்டால், அது அவரை மிகைத்து விடும். நீங்கள் மக்களுக்கு இலகு வானதையே கூறுங்கள். மக்களுக்கு இலகு படுத்திக் கொடுங்கள். நான் மக்களுக்கு நற் செய்தி கூறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளேன். இதுபோன்ற அமுத வாக்குகள் அனைத்தும் அண்ணலார்(ஸல்) அவர்களின் பொன்மொழி களில் பிறந்தவை!*

வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவே – நபியவர்கள், பிறப்பது முதல் இறப்பது வரையிலான எல்லா செயல்களின் வடிவங்களை வாழ்ந்தும் வழிகாட்டியும் சென்றிருக்கிறார்கள். அதற் காகத்தான் தனது அந்தரங்க அலுவல்கள் கூட மக்கள் முன் வெளிச்சம் பட வேண்டும் என்று தனது அன்பு மனைவி ஆயிஷா(ரலி) அவர்களின் வாயிலாக அறிவிக்கச் செய்து விட்டார்கள்.

அல்குர்ஆன் இறக்கப்பட்டதும், நபி களாரின் வாழ்வு முழுதும் பதியப்பட்டதும் இதற்காகத்தான். ஆம்! மக்கள் இஸ்லாத்தை எளிதாக விளங்கி, அவற்றைச் சரிவர கடைப் பிடித்து தமது வாழ்வினில் நடைமுறைப்படுத்த வேண்டும். இஸ்லாம் ஒன்றும் “கசப்பான மருந்து அல்ல! மலைகளின் பள்ளம் அல்ல! கடலின் ஆழம் அல்ல! புரியாத கணக்குப் பாடம் அல்ல! Ph.D பட்டம் அல்ல! தரையில் நின்று ஆசையோடும் ஏக்கத்தோடும் நோட்ட மிடும் உயரே பறக்கும் விமானம் அல்ல இஸ்லாம்!

இஸ்லாம், நோயாளிகளுக்கு நோய் தீர்க்கும் இனிப்பு மருந்து! மலைமீது ஏற உதவும் உறுதியான படிக்கட்டு! கடல் ஆழம் சென்று பார்க்க வைக்கும் நீர்மூழ்கிக் கப்பல்! புரியாத கணக்குப் புதிர்களையும் எளிதில் தீர்க்கும் கோட்பாடு! எழுத படிக்கத் தெரியாதவரும் சிந்தித்துணரும் அறிவுக் களஞ்சியம்! சிறகுகள் கொண்டு வானத்தில் வட்டமிட்டுச் சுவனத்தின் வாசனையை நுகரவைக்க உதவும் ஆகாயப் பறவை இஸ்லாம்!

எனவே, இஸ்லாமிய மார்க்கத்தை ஒரு வாழ்வியல் நெறியாகவே நாம் அடையாளப் படுத்த வேண்டும். இஸ்லாத்தை மதமாகவோ, சடங்கு சம்பிரதாயமாகவோ இறுக்கம் கொண்டு முரட்டுப் பிடிவாதத்தோடும், வறட்டு கவுரவத்தோடும், ஆதிக்க அடக்குமுறையோடும் யாரேனும் அடையாளப்படுத்தினால், நிச்சயம் அவர் ஈருலக வாழ்விலும் கைசேதப்படுவார்.

இங்கே முக்கியத்துவமும், முன்னுரிமையும் அனைத்துச் செயல்களுக்கும் ஒரே மாதிரியாக தரப்படுகின்றன. உதாரணமாக... தாடியையும் தொழுகையையும் ஒரே தரத்தில் நிறுத்தி அளவிடுவது, கரண்டைக் காலையும் கொள்கையையும் ஒரே தரத்தில் நிறுத்திப் பேசுவது போன்ற அறிவில்லா செயல்பாடுகள் சிலரால் அரங்கேற்றப்படுகின்றன. தாடியை வளர்த்து பிறர் மானம் வாங்குவது, கரண் டையை பேணி பிறரை கேவலப்படுத்துவது, சொற்பொழிவுகளை கேட்டுத் மனம் மாறாமல் பிறரை புறம் பேசுவது போன்ற, புறத்தோற்றத்தில் பிறரின் பார்வைக்கு மட்டுமே வாழ்ந்து போகும் இறைநம்பிக்கை நடிகர்கள் இங்கே பலர் இருக்கிறார்கள்.

நான் மட்டுமே சரி, என்னுடன் இருப்ப வர்கள் மட்டுமே சரி, என் கருத்து மட்டுமே சரி, எங்களை ஏற்றுக் கொண்டவர்கள், எங்களின் பேச்சை கேட்பவர்கள் மட்டுமே சரி, எங்கள் கருத்துக்கு அப்படியே தலையாட்டு பவர்கள் மட்டுமே சரி!.... இவ்வாறான கடினப் போக்கு கொண்ட, விமர்சனங்களை காது கொடுத்து வாங்காத, விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளாத, நாகரிக விமர்சனங்களை மற்றவர் மீது முன்வைக்கத் தெரியாத, ஆரோக்கியமான மாற்றங்களை தன்னுள் கொண்டு வந்திராத இத்தகையவர்களின் இஸ்லாமிய அழைப்பும் இறுக்கமானதாகவும், பிற்போக்கு வாய்ந்ததாகவுமே அமையும். அவை மக்களின் பார்வைக்கு அதிரடியாகவும், அசத்தலாகவும் தெரிந்தாலும் உண்மையில் அந்த அழைப்புப்பணி பெயரளவிலேயே முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆகவே, இஸ்லாமிய மார்க்கத்தை முதலில் தன்னளவிலும் பிறகு, தன் குடும்ப அளவிலும் பிறகு, தன் சமூகளவிலும் இலகுப்படுத்தி, அதனூடாய் வெளிப்படும் இஸ்லாமிய அழைப்பினை அழகுபடுத்தி வீரியப்படுத்தி னால், இஸ்லாத்தினை எளிதில் தலை தூக்க வைக்கலாம்.



# நற்செயல்கள் மூலம் சுவனம் செல்வோம்:

– முஹம்மது யஹ்யா பாஷா

மனிதர்கள் தமது அன்றாட வாழ்வில் தத்தமது பணியை செய்து கொண்டு வாழ் நாளை கழித்து வருகின்றனர். இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் பெரும் கனவை கொண்டவனாகவும், அதனை அடைவதற்கு தன் வாழ்நாளைச் சுழற்றிவிட்ட பம்பரத்தை போல வேகமாக பணியை செய்து அக்கனவை நனவாக்க விரும்புகிறான்.

மனிதர்களிடையே இன்று மனிதாபி மானமும், உதவி செய்யும் மனப்பான்மையும் விலை பொருளாக மாறி வருகின்றன. தமிழில் உள்ள செய்யுட்களில் வரும் பாட லான "தன்பெண்டு, தன் பிள்ளை, சோறு" என தனக்காக மட்டும் சுயநலபோக்குகள் எங்கும் பரவிக் காணப்படுகின்றன. அண்டை வீட்டாரிடம் கூட சிரித்துப் பேச நேரமில்லா சமூகமாக மாறி வரும் அவல நிலையை என்னவென்று சொல்வது?...

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்திய மாக! தமக்கு விரும்புவதையே தம் அண்டை வீட்டாருக்கும் அல்லது தம் சகோதரருக்கும் விரும்பாத எந்த அடியாரும் முழுமையான இறைநம்பிக்கையாளர் ஆகமாட்டார்.
(அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம்)

நற்செயல்கள் என்றால் என்ன? நற்செயல்கள் என்பது இறைவனுக்குக் கீழ் படிவது, தொழுகையை நிலை நாட்டுவது, ஜகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது போன் றவை மட்டும் அல்ல! அதைத் தாண்டியும் நற்செயல்கள் இருக்கின்றன என்பதை இறைவன் தன் திருமறையில் குறிப்பிடுகின்றான்.

நற்செயல் என்பது உங்களுடைய முகங் களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல! மாறாக அல்லாஹ்வையும், இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் மேலும் (அல்லாஹ் வின் மீதுள்ள நேசத்தின் காரணமாகத்) தமக்கு விருப்பமான பொருளை உறவினர் களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், மேலும் தொழுகையை நிலைநாட்டி, ஜகாத் தைக் கொடுத்து வருவதுமே நற்செயல் களாகும். மேலும், வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும், வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணிய வான்கள் ஆவர்! இவர்களே உண்மையா ளர்கள்; மேலும் இவர்களே இறையச்சமு டையவர்கள். (அல்குர்ஆன் 2:177)

மனித வாழ்வின் மதிப்பையும், கண்ணியத் தையும் தேர்வு செய்கின்ற ஒன்றாக

ஒழுக்கமும், நன்னடத்தையும் அமைகிறது.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். உங்களில் எவர் ஒழுக்கத்திலும், நடத்தையிலும் சிறந்தவரோ அவரே உங்களில் சிறந்தவர் ஆவார்.
(புகாரி, முஸ்லிம்)

இறைவன் மனிதனை இவ்வுலகில் படைத்ததன் அடிப்படையான காரணம் மனிதர்களில் எவர் இறைவனுக்கும், மக்களுக்கும் சிறந்தவர்களாக திகழ்கிறார்கள் என்பதைச் சோதிப்பதற்காகவே ஆகும். ஆம், இவ்வுலக வாழ்க்கை என்பது மறுமை வாழ்வில் வெற்றி அடைவதற்காக நாம் சந்திக்கும் தேர்வாகும். இத்தேர்வில் வெற்றி பெறுபவர்களின் பட்டியல் நாளை மறுமை நாளில் வெளியிடப்படும். மேலும், மனிதர்கள் செய்த நன்மை மற்றும் தீமையான காரியங்கள் அனைத்தும் மீசான் தராசுகளில் வைத்துப் பார்க்கப்படும்.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். மறுமை நாளில் செயல்களை எடை போடும் மீசான் எனும் எடைத் தட்டில் வைக்கப்படும் பொருள்கள் அனைத்திலும் கனம் வாய்ந்தது நற்குணமே.
அறிவிப்பவர்: அபூதர்தா (ரலி)

மனிதனின் எண்ணம், செயல்கள் என அனைத்தும் இவ்வுலக வாழ்க்கையை மையப்படுத்தியதாகவே இருப்பதால், அவனுடைய போக்கும் சுயநலமாகவே அமைந்திருக்கிறது. மேலும், நற்குணங்களும், நற்செயல்களும் தன்னகத்தே கொண்டு, தானும் பின்பற்றி அதனை மற்றவர்களிடமும் பரப்பாமல், இவ்வுலக மாயையில் மாட்டிக் கொண்டிருக்கின்றான்.

நாம் செய்யக் கூடிய செயல்கள் அனைத்தும் இறைவனுக்காக இருக்கையில் அதுவும் நற்செயல்தான். ஏன் மற்ற சகோதரரை பார்க்கும் போது புன்முறுவல் செய்வதும் சிறு தர்மம் போன்றதாகும்.

நம் எண்ணத்தையும், செயலையும் மறுமை வெற்றியை நோக்கிய பயணமாக ஆக்குவோம்! நாளைய மறுமை நாளில் ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் எனும் சுவனத்திற்கு உரியவர்களாக ஆக முயற்சிப்போம்.






# பாடம் படிக்கட்டும்; படிக்கட்டுத் தொங்கிகள்

– வி.எஸ். முஹம்மத் அமீன்

*“படிக்கட்டில் பயணம் செய்த இரண்டு மாணவர்கள் பாலத்திலிருந்துவிழுந்து சாவு”*

*“ஓடும் பேருந்தில் தாவி ஏறியவர் தவறி விழுந்து மரணம்”*

*“படிக்கட்டில் பயணித்தவர் பரிதாபச் சாவு”*

இதுபோன்ற செய்திகள் அடிக்கடி நாளிதழ்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்தச் செய்தியை மேலோட்டமாகப் பார்த்து புரட்டி விடுகிறோம். சிலர் ‘உச்’ கொட்டி இரக்கப்படலாம். ஆனால் இது சாதாரணமானது அல்ல.

இந்தச் செய்தியைப் படிப்பவருக்கு அந்த நேரத்தில் மட்டும் வலி இருக்கும். அடுத்த செய்தி வலியை மறக்கடித்து விடும். இந்தச் சம்பவத்தை நேரில் பார்ப்பவர்களுக்கு அன்று முழுவதும் ஒரு மாதிரியாக இருக்கும். பார்ப்பவர்களிடமெல்லாம் சொல்லிக் கொண்டு வருந்தலாம். ஆனால் அந்தச் செய்தி நாமாகும் போது... நாம் உயிருக்குயிராய் நேசிக்கும் நம் செல்ல மகனைப் பற்றிய செய்தியாக அது இருந்தால்..., நமக்கிருக்கின்ற ஒரு பிடிப்பான பாசமிகு அருமைக் கணவன் அந்தப் படிக்கட்டுப் பயணியாக இருந்தால்...

நம் வாழ்வு முழுவதும் அதன் நிழல் படியும். பேருந்துகளில் தொங்கிக் கொண்டு செல்பவர்களைக் காணும் போதெல்லாம் பகீரென்றிருக்கும். வயிற்றுக்குள் ஒரு அமிலம் சுரந்து ஊறும். அப்படிப் பயணிப்பவர்கள் மீது ஒரு கோபம் வரும்.

பெரும்பாலும் அரை டவுசரும், காதுக் கடுக்கனும், கண்டபடிக்கு சிகை சிகைத்தும் இருக்கின்ற சின்னப் பயல்கள்தான் அநியாயத்துக்கு இப்படித் தொங்குகிறார்கள். தங்களை ஹீரோவாக நினைத்துக் கொள்கிறார்கள் போலும். பெண்களை வசியப் படுத்தியதாக பெருமிதம் கொள்கிறார்கள் பேருந்துகளின் விரைதலோடு அவர்களும் ஓடுகின்றார்கள். ஜன்னல் கம்பிகளை பிடித்துக் கொண்டு அனாசயமாய் தொங்கு கிறார்கள். எதிர்படும் மனிதர்களைத் தட்டி விடுகிறார்கள். காட்டுக்கத்தல் கத்துகிறார்கள்.

இது ஒழுங்கு மீறல். பொதுவிடங்களில் மேற்கொள்ளும் வரம்பு மீறல்.. இதைக் கண்டிப்பது யார்? தண்டிப்பவர் எவர் ? நடத்துனர் ஏதெனும் சொன்னால் போச்சு.. அவரையும் விட்டபாடில்லை. போய்ச் செர்ந்தே ஆக வேண்டும் என்ற நிர்பந்தம் இருந்தாலும் இப்படித் தொங்கக் கூடாது தானே ! இதனால் எவ்வளவு பாதிப்புகள்... இதற்கெல்லாம் மாற்று என்ன! அரசும், அதிகாரிகளும் பேசியே தீர வேண்டும். மாற்றும் ஏற்பாடுகளை தாமதமின்றிச் செய்ய வேண்டும்.

சென்னை போன்ற நகரங்களில் நகரப் பேருந்துகளின் பயன்பாடு மிக அதிகமாக

இருக்கின்றது. இந்தப் பயன்பாடுகளுக்குரிய பேருந்துகள் எப்போதுமே பிதுங்கிக் கொண்டு வருகின்றன.

பேருந்தினுள்ளே நெருக்கி, நசுங்கி, திணறி, முட்டி மோதித்தான் பயணிக்க வேண்டியிருக்கிறதே ஏன்? நவீன வசதிகள் விண்ணை தொட்டு நிற்கின்ற இந்தக் காலத்திலும் இடம் பெயர்தலில் இப்படியொரு அவலம் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. இதைச் செப்பனிடுவது யார்?

கலைக் கூத்தாடித் தனங்களைப் பயணங்களில் காட்டும் போது பார்க்கின்ற பிற மாநிலத்தவர்கள், சுற்றுலாப் பயணிகள் நம்மை மிக அவலமிக்கவர்களாக பார்க்கின்றார்கள்.

பெரும்பாலான பேருந்துகள் இப்படி நிறைந்து வழிந்து வருவதும் நெடுநேரக் காத்திருத்தல்களுக்குப் பின் அப்பேருந்துகள் வருவதும் பயணிகளை தொங்கும் நிர்பந்தத்திற்கு தள்ளுகின்றது. அப்படியே 'தம்' பிடித்து உள்ளே ஏறினாலும் நின்று பயணிக்க முடியாத அளவுக்கு நெருக்குதல்கள், வியர்வை நாற்றங்கள், திட்டுதல்கள் எல்லாவற்றையும் சகித்து நின்றாலும் இறங்க வேண்டிய நிறுத்தங்களை அறிய முடியவில்லை.

பயணச் சீட்டுக் கட்டணம் உயர்ந்த பின்னும் கூட அவல நிலை மாறவே இல்லை. இது தீர்க்க இயலாத பிரச்னையா என்ன? 'நஷ்டத்தில் போக்குவரத்துக் கழகங்கள்' என்று இன்னும் எத்தனை காலத்துக்கு புலம்பிக் கொண்டிருக்கப் போகிறோம். பக்கத்து மாநிலங்களோடு ஒப்பீடு செய்து நம்மை நம்மே எவ்வளவு காலத்துக்கு ஆறுதல்படுத்திக் கொண்டிருக்க முடியும்.

இடம்பெயர்தலில் ஏற்படும் பிரச்னைகளை உடனடியாக தீர்க்க வேண்டும்.

இதற்கான பல வழிமுறைகளை யோசிக்காலம்

* சாலை மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் பரவலாக்கப்படவேண்டும். தொங்கிகளுக்கு அவர்களின் தவறுகளை உணர்த்த வேண்டும். மீறுபவர்கள் தாமதமின்றி தண்டிக்கப்பட வேண்டும்.
* மாணவர்களுக்கு கல்லூரிகளில் நடைமுறை ஒழுக்கங்கள் போதிக்கப்பட வேண்டும். இல்லையெனில் மாணவர்கள் என்றாலே ரௌடித்தனமும், சில்மிசமும் நிறைந்த பொறுப்பற்றவர்கள் என்ற இமேஜ் நிலைத்துவிடும்.
* அலுவலகம் மற்றும் பள்ளி நேரங்களில், அதிகமாகப் பயன்படுத்தப்படும் தடங்களில் கூடுதலாக பேருந்துகள் விட ஏற்பாடு செய்ய வேண்டும்.
* பள்ளி மாணவர்களுக்கான தனியார் பேருந்துகளுக்காக பள்ளி நிர்வாகத்தை ஊக்கப்படுத்த வேண்டும்
* அரசு மூலமே ஷேர் ஆட்டோ திட்டத்தை விரிவுபடுத்தலாம்.




# ONLINE FREE UNANI HERBAL CONSULTATION



044-2848 1344 * Email: drsyedmmameen@gmail.com

for * Sinusitis * Joints Pain * Infertility
* Nervous Debility * Obesity * Beauty & Hair Care

in public interest by **Dr. Hakim Syed M.M.Ameen**
**S.k's Herbal Medical Hospital & Research Centre**
36, J.J.K. Road, Royapettah, Chennai - 600 014. India.

# வேதவரிகள்

***மனிதர்களே! உங்கள் இறைவனை அஞ்சி (நடந்து) கொள்ளுங்கள். அவன் தான் உங்களை ஒரே உயிரிலிருந்து படைத்தான். அதிலிருந்தே அதன் துணையையும் அவன் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண் களையும் பெண்களையும் அவன் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி நீங்கள் ஒருவருக்கொருவர் (உதவி) கேட்கிறீர்களோ அந்த அல்லாஹ் வையும் உறவுகளை (முறிப்பதை)யும் அஞ்சி (நடந்து) கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களை கண்காணித்துக் கொண்டிருக்கிறான்.***

***(திருக்குர்ஆன் 4:1)***

*முதலில் இங்கு அல்லாஹ், தன்னை அஞ்சி நடந்து கொள்ளுமாறு தன் படைப்புகளுக்குக் கட்டளையிடுகின்றான். அல்லாஹ்வை அஞ்சுதல் (தக்வா) என்றால், அவனுக்கு இணை கற்பிக்காமல் அவனை மட்டுமே வழிபடுவதாகும். ஒரே உயிரிலிருந்தே எல்லா மனிதர்களையும் படைத்த தனது ஆற்றலையும் அல்லாஹ் இங்கு சுட்டிக்காட்டுகின்றான்.*

*ஒரே உயிர் என்பது ஆதி மனிதர் ஆதம் (அலை) அவர்களைக் குறிக்கும் பின்னர் அவரிலிருந்தே அவருடைய துணைவி ஹவ்வா (அலை) அவர்களை அல்லாஹ் படைத்தான்.*

*அடுத்து அவ்விருவரிலிருந்து ஏராள மான ஆண்களையும் பெண்களையும் அவன் பல்கிப் பெருகச் செய்தான். என்று அல்லாஹ் கூறுகிறான். அதாவது ஆதம், ஹவ்வா ஆகிய இருவரிலிருந்தும் ஏராள மான ஆண்களையும், பெண்களையும் படைத்து, அவர்களை உலகின் பல பாகங் களிலும் பல்வேறு இனத்தவர்களாக, நிறத்தவர்களாக, குணத்தவர்களாகப் பரவி வாழச் செய்தான். இறுதியில் அவர்கள் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்வார்கள்.*

# தூதர் மொழிகள்



# மஹர் – திருமண நன்கொடை தருவீர்!

*நிபந்தனைகளில் நீங்கள் நிறைவேற்றக் கூடியவற்றில் மிகத் தகுதியானது, நீங்கள் உங்கள் மனைவியரை உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களாக ஆக்கிக் கொள்ள நீங்கள் அவர்களுக்கு மஹரைத் தருவது தான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*(புஹாரி5151, முஸ்லிம்2542, திர்மிதி1046, அபூதாவூத்1827)*

திருமண பந்தம் நிறைவேற மிக முக்கிய பங்கு வகிப்பது, மஹர் என்ற திருமண நன்கொடை தான். ஒரு பெண் தன்னை ஒருவனிடம் ஒப்படைத்து மனைவி என்னும் உரிமையை வழங்கும் முன், தனக்கு கணவனாக வரும் அவனிடமிருந்து முன் கூட்டியே பாதுகாப்புத் தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பாதுகாப்புத் தொகைக்கே மஹர் திருமண நன்கொடை எனப்படும்.

அதாவது, ஆணிடம் ஒரு பெண் பணம் அல்லது பொருள் பெற்றுக் கொள்வது அவசியம். அவள் தான் இதில் பேரம் பேசும் உரிமை பெற்றவள் ஆவாள். ஆனால், இப்போது வரதட்சணை எனும் பெயரில் மஹர் புறந்தள்ளப்பட்டு பெண்ணிடம் ஆண் கேட்டுப் பெறுகிறான்.

வரட்சணை எனும் கொடிய செய லுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மஹரைத்தான் இஸ்லாம் அனுமதித்திருக்கின்றது. மஹர் மூலம்தான் ஒருத்தியை மனைவியாக்கி கொள்ள முடியும். மஹர் பேரம் இன்றி திருமணம் அமையுமானால் அந்தத் திருமணம் செல்லாது.

இது ஒரு சென்னை

# ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம்

உங்கள் வீடுதான் உங்கள் குழந்தைகளின்
முதல் கல்விக்கூடம். அடுத்து...

# ரஹ்மத்
## பெண்கள் மேல்நிலைப் பள்ளி

அப்துல் காஸிம் நகர், முத்துப்பேட்டை – 614 704, திருவாரூர் மாவட்டம்

பேச: 04369 261796, 94428 15128, 82203 02588

www.rahmathschool.com

உங்கள் பிள்ளையை எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்று முடிவு செய்ய எங்கள் பள்ளிக்கு ஒருமுறை வருகை தாருங்கள்!

இயற்கைச் சூழலுடன் – 20 ஆயிரம் மரங்களுடன்
அமைந்த சுகாதாரமான கல்வி மையம்.

மார்க் (MARK) மட்டுமல்ல,
மார்க்கக் கல்வியும் பண்பும் ஒழுக்கமும்
இறைவணக்கமும் கற்றுத்தரும் நிறுவனம்.

இந்தி, அரபி, ஆங்கிலம்,
தமிழ் அனைத்திற்கும் முன்னுரிமை.

பெண்களின் பாதுகாப்பில்
உறுதியான நிலைப்பாடு.






## அழிவைத் தரும் ஏழு பெரும் பாவங்கள்

1. அல்லாஹ்வுக்கு இணை வைப்பது.

2. சூனியம் செய்வது.

3. அல்லாஹ் எந்த உயிரைக் கொலை செய்வதைத் தடுத்து இருக்கின்றானோ, அந்த உயிரை நியாயமின்றிக் கொலைசெய்வது.

4, வட்டியை உண்பது.

5, அநாதைகளின் சொத்துகளை அபகரிப்பது.

6, போர் நடந்து கொண்டிருக்கும்போது புறமுதுகு காட்டி ஓடுவது.

7, இறை நம்பிக்கையுள்ள ஒழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறுவது.

## உயிரினங்கள் மீது அன்பு செலுத்துவோம்!

நபி(ஸல்) அவர்காள் விலங்குகளிடம் முகத்தில் அடிப்பதையும், முதுகில் சூடு இடு வதையும் தடுத்தார்கள். (திர்மிதி)

தவறான நடத்தையுடைய பெண் ஒரு நாயைக் கண்டாள். அந்த நாய் தாகம் அதிகரித்து நாக்கு வறண்டு, ஒரு கிணற்றை சுற்றி வந்து கொண்டே இருந்தது. உடனே அவள் தனது காலுறைகளை ஒரு துணியில் கட்டி, கிணற்றில் விட்டு தண்ணீர் எடுத்து, அந்த நாய்க்கு நீர் புகட்டினாள். இந்தக் காரணமாக இறைவன் அவளை மன்னித்தான். (புஹாரி, முஸ்லிம்)

எனவே நாமும் உயிரினங்கள் மீது அன்பு செலுத்துவோமாக...

## மூன்று முக்கிய பண்புகள்

முஹம்மது நபி(ஸல்) அவர்கள், எல்லாருக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். அவர்களிடமிருந்து நாம் கற்க வேண்டியது மூன்று முக்கிய பண்புகளை பார்ப்போம்.

1. தூய்மை – நபியவர்களின் தூய உள்ளத்தை உலகிற்கு காட்டியது.

2. எளிமை – நபியவர்களின் ஏழ்மை வாழ்வை அகிலத்தாருக்கு அறிவித்தது.

3. பொறுமை – எத்தகைய இன்னல்களையும் இடர்பாடுகளையும் இனிய முகத்தோடு ஏற்று, ஈடு இனணயற்ற இஸ்லாத்தை உலகிற்கு காட்டியது.

இம்மூன்று பண்புகளும் நபி (ஸல்) அவர்களோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தன. அதிலும் பொறுமை அவர்களின் ஒப்பற்ற வாழ்விற்குப் பெரிதும் அரணாக விளங்கியது.


## அரபிக் ஆசிரியைகள் தேவை

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் உள்ள ரஹ்மத் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு M.A. ARABIC, B.Ed மற்றும் அஃப்ஸலுல் உலமா படித்த அனுபவமிக்க அரபிக் ஆசிரியைகள் (பெண்கள்) தேவை.

• நல்ல சம்பளம் • உணவு - தங்குமிடம் உண்டு

தொடர்புக்கு : **M.S.பஜ்லுர் ரஹ்மான்**
செல் : 94428 15128, 96297 10017 போன் : 04369 - 261796
மின்னஞ்சல் : fazlurrahman12377@gmail.com

# அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக கோவித்துக் கொண்டு அலையும் மனிதனே!



**நீ..** உன் ஆரோக்கிய விஷயத்தில் உனக்கு மேலுள்ளவர்களைப் பார்த்து கோவித்துக் கொள்ள முடியாது. மாறாக, உன்னை விட மோசமான நிலையில் உள்ள வர்களைப் பார்த்து நன்றி செலுத்துவதே உனது கடமையாகும். உனது கையில் எலும்பு முறிவு இருக்கின்றது எனில், துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள கைகளைப் பார். ஒரு கண் இல்லை எனில், இரண்டு கண்களுமே இல்லாதவர்களைப் பார்த்து உனது படைப்பாளனாகிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து. ஆம்! அருட்கொடைகள் விஷயத்தில் தனக்கு மேலுள்ளவர்களைப் பார்த்து கோவித்துக்கொள்ள எந்த ஒருவ ருக்கும் எந்தவித உரிமையும் கிடையாது.

துன்பங்கள் உன்னைச் சூழும் போது, ஏதேனும் ஓர் உரிமை உனக்கு இருக்குமென் றால், அந்த கஷ்டமான நேரத்தில் உன்னை விட மோசமான நிலையில் உள்ளவர்களைப் பார்த்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து வதேயாகும்.

இதிலுள்ள உண்மை நிலையினை பின் வரும் உதாரணம் மூலம் எளிதாக விளங்கிக் கொள்ளலாம்:

ஒரு பெரியவர், வக்கற்ற ஒரு மனிதனை ஒரு கோபுரத்தின் உச்சிக்கு அழைத்துச் செல்கின்றார். கோபுரத்தின் மீது ஏறும் போது ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு வித்தியாசமான அன்பளிப்புகளை அவனுக்கு வழங்குகின்றார். கோபுரத்தின் இறுதி உச்சத்தில் மிகப் பெரும் அன்பளிப்பை வழங்குகின்றார். அந்த அன்பளிப்புகளுக்குப் பகரமாக அவனிடமிருந்து திருப்தியும் நன்றிக்கடனும் எதிர்பார்க்கப்படும் போது, பிடிவாதமும் பேராசையும் பிடித்த அந்த மனிதனோ, ஒவ்வொரு படியிலும் தான் பெற்றுக்கொண்ட எல்லா அன்பளிப்பு களையும் மறந்து விட்டு, அல்லது ஒன்றுமே நடக்காதது போல் மேல் நோக்கிப் பார்வை யைச் செலுத்துகிறான். "கைசேதமே! இந்தக் கோபுரம் இன்னும் உயரமானதாக இருந்தி ருக்க வேண்டுமே! இன்னும் இன்னும் நான் மேல் நோக்கிப் போயிருக்க வேண்டுமே! இந்தக் கோபுரம் அந்த மலையைப் போன்று அல்லது பிற கோபுரங்களைப் போன்று ஏன் உயரமானதாக இல்லை!" என்று புலம்பி கோவித்துக்கொள்ள ஆரம்பித்தான். இது எப்படிப்பட்ட நன்றி விசுவாசம் இல்லாத ஒரு நிலை என்பதையும், அருட் கொடைகளுக்குச் செலுத்தப்படுகின்ற அவமரியாதை என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

அவ்வாறே, மனிதனுக்கு இல்லாமையி லிருந்து இருப்பு அந்தஸ்த்து வழங்கப்பட் டுள்ளது. அதிலும் கல்லாகவோ மண்ணா கவோ மரமாகவோ மிருகமாகவோ ஆக்காது மனிதனாக ஆக்கி, மனிதர்களுக்கு மத்தி யிலும் முஸ்லிமாக ஆக்கி, அதிகமான காலம் சுகத்தோடும் உடல் ஆரோக்கியத்தோடும் வாழ வைத்து, உன்னதமான எண்ணற்ற அருட்கொடைகளை உனக்கு அருளியிருக் கின்றான். இந்நிலையில், நீ இழந்தவற்றுக்காக அல்லது உனக்கு வழங்கப்படாதவற்றுக்காக அல்லாஹ்வை கோவித்துக் கொள்வதும் பொறுமையிழப்பதும், "என்னதான் செய் தேன், அல்லாஹ் எனக்கு இப்படிச் செய்து விட்டானே!" என்று அல்லாஹ்வுடைய ருபூபிய்யத்தை சாடுவது, குறை கூறுவது – உனக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களை விட மிகப்பெரிய கஷ்டமும், முஸீபத்தும் ஆகும்.

(நன்றி: இணையதளம்)

# எல்லாருக்கும் இஸ்லாம்




| | | |
|---|---|---|
| நூல் அறிமுகம் | : | "அழைப்பொலி"<br>**இஸ்லாம் அறிமுகத்துக்கான நவீன வாசிப்பு** |
| ஆசிரியர் | : | மக்தூம் தாஜ் |
| வெளியீடு | : | அழைப்பொலி பதிப்பகம்<br>தாங்கல், திருவொற்றியூர், சென்னை–19.<br>தொடர்புக்கு: 98849 28787 |
| விலை | : | ₹ 40/– |

பிறப்பது முதல் இறப்பது வரையிலான இவ்வாழ்க்கையை வாழ்வதற்கு ஒரு சீரான, பக்கச் சார்பற்ற வழிகாட்டுதல் நிச்சயம் தேவைப்படுகின்றது. அவ்வழிகாட்டுதலில் எந்த ஏற்றத் தாழ்வுகளும், எந்தத் தவறான கண்ணோட்டங்களும் இருக்கக் கூடாது. முற்றிலும் அமைதியை விரும்புகின்ற, அமைதியை போதிக்கின்ற, சார்புகள் எதுவுமில்லாத, உலகப் பிரச்னைகளுக்கு தீர்வு கூறுகின்ற கோட்பாடாக அது இருக்க வேண்டும்.

அப்படி எல்லோருக்கும் பொருந்தக் கூடிய கோட்பாட்டினையே இந்நூல் முன் வைக்கின்றது. வெறும் இது இஸ்லாம் அறிமுகத்துக்கான நூல் மட்டுமல்ல! கடவுள் அறிமுகத்துக்கான நூலும் கூட! பிறந்தது எதற்காக என்ற கேள்விக்கு விடைச் சொல்லும் நூலும் கூட! மனித ஒற்றுமைக்கு வழி என்ன என்பதை விளக்கும் நூலும் கூட! உலக அமைதிக்கு அடித்தளம் அமைப்பது எப்படி என்று சொல்லும் நூலும் கூட! தெள்ளிய வாழ்வியல் பாதைக்கு வழிகாட்டும் நூலும் கூட!!

கடவுள் சித்தாந்தத்தை மறுக்கும் பகுத்தறிவுச் சகோதரர்களின் வாதங்களுக்கு விடை கொடுக்கும் வண்ணம், முதல் அத்தியாயமான "கடவுளும் பகுத்தறிவும்" என்கிற பகுதி அமைந்துள்ளது. ஒட்டு மொத்த மனிதச் சமூகத்தின் தொடக்க கால வரலாறு, வானம், பூமி மற்றும் அதிலுள்ளவைகளின் தோற்றம், மனிதனின் ஆதிப்பிறப்பு எப்படி உருவானது, மனிதன் தோன்றுவதற்கு முன் என்ன நடந்தது, எதற்காக பூமிக்கு வந்தோம், எங்கே செல்ல இருக்கிறோம், இப்பூவுலக வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களின் வரையறை என்ன? போன்ற பல விடை புரியா கேள்விகளுக்கு நறுக்கு தெறித்தார் போல் விடைகளை அள்ளித் தருகிறது இரண்டாவது அத்தியாயமான "நம் ஆதிகல வரலாறு" என்கிற பகுதி.

மேலும் திருக்குர்ஆன் அறிமுகம், இயேசுவின் இஸ்லாம் குறித்த உண்மையான பார்வை, நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு மிகச் சுருக்கமாக, இஸ்லாத்தின் மீது தொடுக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கான தெள்ளிய மற்றும் சுருக்கமான விடைகள், இஸ்லாத்தின் பிரதானமான கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகள் என இஸ்லாத்தில் இதுவெல்லாம் தெரிந்திருத்தல் அவசியம் என்ற அளவுக்கு இந்நூலில் தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன.

தமிழறிந்த முஸ்லிம் அல்லாத மக்களுக்கு இந்நூலை அறிமுகப்படுத்த வேண்டும். முஸ்லிம்கள் தங்கள் திருமணம் போன்ற நிகழ்வுகளில் அழைக்கப்படும் சகோதர சமுதாயத்தவர்களுக்கு இந்நூலை பரிசாக வழங்க வேண்டும்.

இதுவரை தமிழில் வெளிவந்திருக்கின்ற இஸ்லாம் அறிமுகத்துக்கான புத்தகங்களில் இது நிச்சயம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். இஸ்லாத்தை ஒரு புதிய கோணத்தில் அறிமுகம் செய்திருக்கிறார் நூலாசிரியர்.

எண்ணங்களை தூய்மையாக்கி, முயற்சிகளை உறுதியாக்கி, ஈருலக வாழ்க்கையை செம்மையாக்கிட இணையில்லா இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

– அழைப்பொலி குழுமம்

# இந்தப் புறாக்களைப் பாருங்கள்..!

இந்தப் புறாக்கள்தாம் எத்துணை பேறு பெற்றவை.

நேற்று பற்றிய வருத்தம் இல்லை.
இன்று பற்றிய பயமும் இல்லை.
நாளை பற்றிய கவலையும் இல்லை.

நிம்மதியான இவர்களின் வாழ்வைப் பாருங்கள்.
அமைதியான இவர்களின் நடத்தையைக் கவனியுங்கள்.

என்ன இப்படி நடந்துவிட்டதே என்கிற பச்சாதாபமும் இல்லை.
என்ன ஆகப் போகின்றதோ என்கிற பயமும் இல்லை.
நினைத்தபடி நடக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் இல்லை.

நிம்மதியான இவர்களின் வாழ்வைப் பாருங்கள்.
அமைதியான இவர்களின் நடத்தையைக் கவனியுங்கள்.

ஏன்தான் இப்படியெல்லாம் நடந்துக்கொள்கின்றார்களோ
– என்கிற எரிச்சலும் இல்லை.
என்று முடியும் இவர்களின் கொட்டம் என்கிற கோபமும் இல்லை.
ஒரு நாள் விடியத்தானே போகும் என்கிற ஏக்கமும் இல்லை.

நிம்மதியான இவர்களின் வாழ்வைப் பாருங்கள்.
அமைதியான இவர்களின் நடத்தையைக் கவனியுங்கள்.

துரோகம் செய்கின்ற நண்பர்கள் இல்லை.
ஏமாற்றுகின்ற தலைவர்கள் இல்லை.
திசை திருப்புகின்ற பத்திரிகைகள் இல்லை.

நிம்மதியான இவர்களின் வாழ்வைப் பாருங்கள்.
அமைதியான இவர்களின் நடத்தையைக் கவனியுங்கள்.

பொய் இல்லை. புரட்டு இல்லை. மோசடி இல்லை.
வஞ்சகம் இல்லை. கொடுமை இல்லை. அக்கிரமம் இல்லை.
உரிமைப் பறிப்போ மருந்துக்கும் இல்லை.
நம்ப வைத்துக் கழுத்தறுக்கின்ற கயமை இல்லை.
ஆளுக்கொரு நீதி என்கிற அநியாயமோ மருந்துக்கும் இல்லை.

நிம்மதியான இவர்களின் வாழ்வைப் பாருங்கள்.
அமைதியான இவர்களின் நடத்தையைக் கவனியுங்கள்.

குழி பறிப்புகளும் இல்லை. குஷிப்படுத்தல்களும் இல்லை.
குருட்டுத்தனமான அடிமை புத்தியும் இல்லை.
மொத்தத்தில் சண்டை இல்லை. சச்சரவு இல்லை.

நிம்மதியான இவர்களின் வாழ்வைப் பாருங்கள்.
அமைதியான இவர்களின் நடத்தையைக் கவனியுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எப்படி வாழ்ந்தாய்? என்ன செய்தாய்?
ஏன் செய்தாய்? எதற்காக செய்தாய்? எதனைச் சம்பாதித்தாய்?
எப்படிச் சம்பாதித்தாய்? எப்படி செலவிட்டாய்?
இளமையை எப்படி செலவிட்டாய்?
போன்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் தர வேண்டுமே என்கிற
கவலையோ, அக்கறையோ, பயமோ, பதற்றமோ மருந்துக்கும்
இல்லை.

ஆஹா...!
இந்தப் புறாக்கள்தாம் எத்துணை பேறு பெற்றவை!

– T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்






# வீடியோகேம் வண்ணத்துப்பூச்சிகள்

நமது பிள்ளைகளைச் சீரழிக்கும் வீடியோகேம்கள்!

இந்தப் பரபரப்பான வாழ்க்கையில் இயந்திரமாக ஓடிக்கொண்டிருக்கும் நம்மை திடீர் என்று நிறுத்தி, நமது அன்புக் குழந்தைகள் சிக்கித் தவிக்கும் ஓர் உலகைப் பற்றிய செய்தியை நமது கவனத்திற்குக் கொண்டுவருவோம்.

அவர்கள் நாள்தோறும் மணிக்கணக்கில் விளையாடும் மற்ற இணையதள விளை யாட்டுகள் அனைத்தும் நம் குழந்தைகளைப் படிப்படியாகக் கொன்றுவிடும்.

இணையதள விளையாட்டுகள் வணிகத் துக்காக மட்டும் உருவாக்கப்படுவதில்லை. தொழில்நுட்ப ஆயுதமாகவும் பயன்படுத்தப் படுகின்றன. அதிக அளவு இளைஞர் சக்தி கொண்ட தேசத்தை வீழ்த்தும் தொழில் நுட்ப ஆயுதம் இந்த இணையதள விளை யாட்டுகள். அதன் மூலம் குழந்தைகளின், இளைஞர்களின் சிந்தனைகள் மழுங்கடிக்கப் படுகின்றன. பல்வேறு இணையதள விளையாட்டுகள் உலக நாடுகளால் தடை செய்யப்பட்டுள்ளன. அவை வன்முறை, ஆபாசம், திருட்டு, மோசடிக்கு அடிமை யாக்குதல் முதலிய தீயசெயல்களுக்கு வழி வகுக்கின்றன. சிந்தனையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளன என்று அதற்குத் தடை விதித்த நாடுகள் விளக்கம் அளித்துள்ளன.

இப்போதெல்லாம் தெருக்களில் குழந்தைகள் ஓடி ஆடி விளையாடுவதை பார்க்க முடிவதில்லை. பள்ளி வார விடுமுறையில் கிரிக்கெட் மட்டையை தூக்கிக் கொண்டு மகிழ்ச்சியாக விளையாடப் போகும் குழந்தைகளைக் காண்பது அரிதாக உள்ளது. ஒவ்வொரு வீட்டின் அறையில் ஓரமாக ஸ்மார்ட் ஃபோனைக் கையில் வைத்துக் கொண்டு வீடியோகேம் என்ற ஆபத்தான உலகில் அவர்களது மொத்த உணர்வுகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். நமது குழந்தை களுக்கு ஆபத்து ஏற்படுவதை விரும்பாத நாம், அவர்களை மிகவும் அக்கறையுடன் வளர்க்கும் நாம், வீடியோகேம் என்ற ஆபத்தை அவர்களுக்கு கொடுத்து விடுகிறோம்.

அவர்கள் நவீன தொழில்நுட்பதைப் பயன்படுத்துவதை பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம். அதன் விளைவுகளை ஆராய்ந்தால், அது அவர்களின் ஆரோக்கியத் தையும், அறிவையும் எப்படிச் சிதைக்கிறது என்று விளங்கிக் கொள்வோம். ஒரு குழந்தை ஆரோக்கியமாக, அறிவாக வளர மூன்று விஷயங்கள் தேவை. ஆரோக்கிய மான உணவு, நல்ல தூக்கம், நாள்தோறும் ஒரு மணி நேரம் ஓடி மற்ற குழந்தைகளுடன் விளையாட வேண்டும். ஒரு குழந்தையின் குறைவான உடல் அசைவினால் ரத்த அழுத்தம், உடல் பருமன், சுறுசுறுப்பின்மை, முதுகுத் தண்டுவடப்பிரச்னை, அதிக வெளிச்சம், இரைச்சலினால் கண்பார்வை கோளாறு, மனச்சிதைவு, ஒற்றைத் தலை வலி, தூக்கத்தில் பல பிரச்னை (தூக்கதில்

உடல் அதிர்வு, நடப்பது, பேசுவது) முறை யற்ற உணவு பழக்கம் ஆகியன பிற்காலத்தில் அவர்களின் ஆரோக்கியத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த வீடியோகேம் குழந்தைகளிடம் 17.4% அளவுக்கு உயர் ரத்த அழுத்தப் பிரச்னையை ஏற்படுத்துகிறது.

குழந்தைகளின் பொழுது போக்கை ஆரோக்கியமாக ஆக்குங்கள். வேண்டாம் இந்த விபரீதம். நல்ல ஓடி ஆடும் விளை யாட்டை கற்றுக் கொடுங்கள். புத்தகங்களை வாசித்து நல்ல கதைகளைச் சொல்லுங்கள்.

அனைத்து தொழிநுட்பங்களிலும் நன்மையும் தீமையும் இருக்கவே செய் கின்றன. நாம் அதை சரியாக அணுக வேண்டும். அதை அளவுடன் பயன்படுத்து வதில்தான் அதன் பலனை பெறமுடியும். அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், வீடியோகேமை பல்வேறு பயிற்சிகளுக்கும் ஆக்கப்பூர்வமான செயல்களுக்கும் பயன் படுத்துகின்றன. விமான ஓட்டிகள், அறுவை சிகிச்சை வல்லுநர்கள், விளையாட்டு வீரர்கள் என பலரும் தங்களது திறனை மேம்படுத்த பயன்படுத்துகின்றனர். நாமும் இந்த வீடியோகேமை நல்ல வழியில் பயன் படுத்த நமது குழந்தைகளுக்கு வழிகாட்ட முடியும்.

குழந்தைகளின் நினைவாற்றல், கணித புதிர் பயிற்சிகள், புதிர்கள், வினா விடைகள், தொழில்திறனை மேம்படுத்தும் பல்வேறு பயனுள்ள விளையாட்டுகள் இணைய தளத்தில் இருக்கின்றன. அவற்றை குழந்தை களுக்கு அறிமுகப்படுத்தலாம். அந்த விளையாட்டை விளையாடுவதற்கும் அதிக பட்சம் அரை மணி நேரம் மட்டுமே ஒதுக் குங்கள். குறைந்தது ஒருமணி நேரமாவது இயற்கையான சுழலில் மற்ற குழந்தைகளுடன் ஓடி விளையாட அனுமதியுங்கள். அவை உடலுக்கும் மனதுக்கும் அறிவுக்கும் ஆரோக்கி யத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும். நமது பாரம்பரிய வீரவிளையாட்டுகளை அழியாமல் பாதுகாக்கவும் செய்யலாம்.

குழந்தைகள் நம்மைத் தொந்தரவு செய்யாமல் இருந்தால் போதும், ஏதோ ஒன்றை விளையாடி விட்டுப் போகட்டும் என்று அலட்சியமாக இருந்தால், அது அவர்களின் வாழ்க்கையை சிறுது சிறுதாக அழித்துவிடும். இறுதியில் புலம்பி எந்த பயனும் எற்பட போவது இல்லை.

நமது குழந்தைகளைதாம் நமது வாழ்வும் எதிர்காலமும்.

– அன்வர் திவான்

## இஸ்லாமிய அறிவுப் புதிர்கள்

**தொகுப்பு ஹஸன் பானு ஆலிமா**

1. கப்பலைத் தயாரித்த இறைத்தூதர் யார்?
2. இறைமறுப்பு செயல்களில் ஒன்று எது?
3. "இவர் ஒரு தெருவில் நடந்து வந்தால் ஷைத்தான் மற்றொரு தெருவில் நடப்பான்" என்று நபியவர்களால் சொல்லப்பட்ட நபித்தோழர் யார்?
4. நரகத்தின் வாயில்கள் எத்தனை?
5. தொழுகை நம்மீது எந்த வயதில் கடமையாகிறது?
6. சொர்க்கத்தில் மக்களை நுழைய செய்வதில் அதிகமானவை எவை?
7. பெண்களின் ஜிஹாத் எது?
8. நோன்பாளிக்கு என்றே உள்ள சொர்க்கவாசல் எது?
9. ஈஸா(அலை) அவர்களின் தாயார் பெயர் என்ன?
10. குர்ஆனின் தாய் எது?

விடைகள் அருகே தலைகீழாக தரப்பட்டுள்ளது.

1. நூஹ்(அலை) (அல்குர்ஆன் 11:37)
2. தந்தையை வெறுத்தல் (புகாரீ 6768),
3. புகாரீ 3683 உமர்(ரலி),
4. ஏழு (அல்குர்ஆன் 15:44),
5. பத்து வயதில் (அபூதாவூத் 494),
6. இறையச்சமும் நற்குணமும் (திர்மிதீ 2004),
7. ஹஜ் (புகாரீ 2875),
8. ரய்யான் (புகாரீ 1896),
9. மர்யம் (அலை) (அல்குர்ஆன் 19:34)
10. சூரத்துல் ஃபாத்திஹா (புகாரீ 776)



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...
ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்விற்காக நிறைவேற்றுங்கள் (அல் குர்ஆன் 2 :196)
அர் ரஹீம்
ஹஜ் & உம்ரா
அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்... அல்ஹம்துலில்லாஹ்... இன்ஷாஅல்லாஹ்...
இந்தியாவிலேயே மிக மிக குறைந்த கட்டணத்தில்
உத்தரவாதம்
இஸ்லாமிய மக்களின் நம்பிக்கைக்குரிய நிறுவனம்
9 ஆம் ஆண்டை முன்னிட்டு
கோடைக்கால உம்ரா - ஏப்ரல்
49,900/-
(10 - நிமிடம் நடை பயணம்)
உம்ரா + தாயிப் உம்ரா
புனித ரமளான் உம்ரா
59,900
(முதல் 15 நாட்கள்)
79,900
(கடைசி 15 நாட்கள்)
84,900
(முழு மாதம்)
விசா,விமான கட்டணம்,உணவு,தங்குமிடம்,
மக்கா- மதினா-ஜியாரத் பஸ் போக்குவரத்து, ஜம் ஜம் உட்பட...
புனித ஹஜ் - 2018
பதிவு நடைபெற்று கொண்டிருக்கிறது
உங்களை பதிவு செய்ய அன்புடன் அழைக்கிறோம்
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்
ரமளானில் செய்யப்படும் ஓர் உம்ரா என்னோடு
ஹஜ் செய்வதற்கு நிகரானதாகும் என்றார்கள்.
அறிவிப்பவர்:இப்னு அப்பாஸ் (ரலி)
முஸ்லிம் : 2409
பதிவு செய்ய கடைசி நாள்:
30-04-18
www.arraheemreligious.com,Email : daralmuntahaindia@yahoo.com.
No:31/13,கரீம் சுபேதார் தெரு, ராயப்பேட்டை,சென்னை -14,போன்:044 - 2848 6888
93805 55566/ 81441 11223 /99401 68011
Le Zero 9003139257 (Royapuram)